MCOP.No. 192/2022

Date : 13.03.2025

Witness Name & Rank – குமார் – PW 1

**சாட்சி அழைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

1. புகார் கொடுக்க 1 நாள் காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து காங்கேயத்தில் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்தின் போது எனது முகவரி எதுவென்றால் கொசவம்பாளையம், கோயமுத்தூரர் சாலை கண்டீயன் கோவில் கிராமம் ஆகும். நான் பல்லடம் அய்யம்பாளையத்தில் குடியிருப்பதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே நான் நீதிமன்ற எல்லை மீறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டி சென்ற வாகனம் சரக்கு ஏற்றி செல்லும் வாகனம் என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற TN 42 AX 5808 மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டதா என்றால் உட்படுத்தப்பட்டது. அந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி எனது வாகனத்தின் ஆய்வு அறிக்கையில் ஆய்வாளர் குறிப்பாணை வழங்கப்பட்டதா குறிப்பிட்டுள்ளதால் தான் நான் எனது வாகனத்தின் ஆய்வு அறிக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்குரிய விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீடு நிறுவனத்தாரரை வழக்கில் சேர்க்காததால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

2. நான் சிகிச்சை முடிந்து மருத்துவர் ஆலோசனை படி வெளி அனுப்பட்டேன் என்றால் சரிதான். மேற்படி ஆலோசனையில் எனக்கு சில மருத்துகளை பரிந்துரைத்தனர் என்றால் சரிதான். எனது மருத்துவர் அறிக்கையின் படி நான் முழுமையாக குணமடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 05.05.2023 க்கு பிறகு நான் தொடர் சிகிச்சையில் இருந்ததை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தறபோது என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் எந்தவேலைக்கு செல்ல முடியவில்லை. நான் விபத்து சமயத்தில் பார்த்து வந்த வேலையை காட்ட எந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது

வருமான சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதிக தொகை இழப்பீடு கோரி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனமோ சேதமும் இல்லை என்றால் சரியல்ல. எனவே நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு முறையாக ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனம் காப்பீடு விதிகளை மீறியுள்ளதால் 3 வது எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர் அல்ல எனவே 2 வது எதிர்மனுதாரர் மட்டுமே இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.